**கவனிக்க.-** 2009.05.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1604 - 2009 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2009.05.29**

*1604 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 652 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 655 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பதிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : ஒஸ்கார் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ67461
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, மார்சு 31
*முகவரி* : 647பி, நீர்கொழும்பு வீதி, மாபோலை, வத்தளை

பணிப்பாளர்.

5-530

---

## பொது அறிவித்தல்

2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய கம்பனியின் கூட்டிணைத்தல் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.-

*கம்பனியின் பெயர்* : கார்ட் ரே (பீவீரீ) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ67652
*முகவரி* : இல. 30, விஜயமங்களாராம வீதி, கொஹுவல

5-532

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ் கம்பனியாக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர் :* ஏசியன் விஷன் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம் :* பீ. வீ. 67140
*பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 996/ஏ4, பன்னிபிட்டிய றோட், பலவத்த, பத்தரமுல்ல

*கம்பனி செயலாளர்*,
ஏசியன் விஷன் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்.

5-541

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டப்படி பகுதி XII இன் கீழான கம்பனி கலைப்பு மற்றும் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. என் (பீவீஎஸ்) 10444

*கம்பனியின் பெயர்* : ரோத் லங்கா (பிறை) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி* : 10 ஆம் மாடி, அக்சஸ் டவர்ஸ், இல. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.* : எச்சி (சிவில்) 06/2008/சீஓ
*நீதிமன்ற கட்டளைத் திகதி* : 03.04.2009
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி* : 07.02.2008
*கம்பனி கலைப்பாளர்களின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
*முகவரி* : சீ/ஓ, எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், ரிஸ்றக்ச அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி, லெவல் 4, இல. 2, காஸ்ட்ல் லேன், கொழும்பு 4

5-544/1

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்ட சரத்து 346 (1) இன் கீழான ரோத் லங்கா (பிறை) லிமிட்டெட் எனும் கம்பனியின் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. என் (பீவீஎஸ்) 10444

*கம்பனியின் பெயர்* : ரோத் லங்கா (பிறை) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி* : 10 ஆம் மாடி, அக்சஸ் டவர்ஸ், இல. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.* : எச்சி (சிவில்) 06/2008/சீஓ
*இணை கம்பனி கலைப்பாளர்களின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
*முகவரி* : சீ/ஓ, எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், ரிஸ்றக்ச அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி, லெவல் 4, இல. 2, காஸ்ட்ல் லேன், கொழும்பு 4
*நியமனத் திகதி* : 03.04.2009

5-544/2

---

## அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

அவுஸ்திரேலியா, விக்டோரியா 3149, மவுண்ட் வேவர்லி, தல்பொட் றோட், இல. 33 இல் வசிக்கும் பெனடிக்ற் வலன்ரினோ விஜயன் ஆகிய நான், கொழும்பு 01, த. பெ. இல. 346, எச்சிலன் சதுக்கம், ஈஸ்ட் ரவர், உலக வர்த்தக சந்தை, தளம் 26 இல் வசிக்கும் டன்ஸ்டன் பர்ணான்டோ என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட அவுஸ்திரேலியாவில் விக்டோரியாவின் பிரசித்த நொத்தாரிசு றொபட் ஹென்றி நீல் சைமன்ஸ் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2008 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆந் திகதி என திகதியிடப்பட்டதுமான விசேட அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தினை இரத்துச்செய்துள்ளதாக, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகிறேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட டன்ஸ்டன் பர்ணான்டோ என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

பெனடிக்ற் வலன்ரினோ விஜயன்.

5-563

---

## அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

நியூசிலாந்து, வெலிங்டன், அவலோன் லோவர் ஹட், சார்ல்ஸ்டன் அவெனியூ, இல. 21 இல் வசிக்கும் சிரில் ரவீந்திரன் பீட்டர் ஆகிய நான், கொழும்பு 01, த. பெ. இல. 346, எச்சிலன் சதுக்கம், ஈஸ்ட் ரவர், உலக வர்த்தக சந்தை, தளம் 26 இல் வசிக்கும் டன்ஸ்டன் பர்ணான்டோ என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட சிங்கப்பூரின் பிரசித்த நொத்தாரிசு சோ கிம் லியன் அய்லின் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2008 ஆம் ஆண்டு தை மாதம் 03 ஆந் திகதி என திகதியிடப்பட்டதுமான விசேட அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தினை இரத்துச்செய்துள்ளதாக, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகிறேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட டன்ஸ்டன் பர்ணான்டோ என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

சிரில் ரவீந்திரன் பீட்டர்.

5-564

---

## பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2009, மே மாதம் 6 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் ''கீயு சொப்ற் (பிறைவேட்) லிமிட்டெட்'' என்பது ''வய்ஸ் ரெக்னோலொஜிக் (பிறைவேட்) லிமிட்டெட்'' என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :

1. கம்பனியின் முன்னைய பெயர் : கீயு சொப்ற் (பிறைவெட்) லிமிட்டெட்
2. கம்பனியின் பதிவு இல. : பீவீ12275
3. பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 58, சேனநாயக்க மாவத்தை, நாவல, இராஜகிரிய
4. கம்பனியின் புதிய பெயர் : வய்ஸ் ரெக்னோலொஜிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் கட்டளைப்படி,

பினான்சியல் சேர்விஸஸ் அன்ட்
கொமர்ஷல் ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

வய்ஸ் ரெக்னோலொஜிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

5-566

## அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பைச் சேர்ந்த பகிரங்க நொத்தாரிசு டீ. சீ. கே. விஜேசிங்ஹ என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டு இல. 3663 இடப்பட்டு 2004, யூலை மாதம் 24 ஆந் திகதியிடப்பட்டு ரத்தொழுகம, தேசிய வீடமைப்புத் திட்டத்தில் இல. 4பி/38ஆர் இல் வசிக்கும் மொஹமட் ஷாகீர் காரியப்பர் ஆகிய நான் கையொப்பமிட்டு ரத்தொழுகம, தேசிய வீடமைப்புத் திட்டத்தில் இல. 3டி/22 இல் வசிக்கும் மொஹமட் யூசுப் ஷிஹாப்டீன் என்வருக்கு என்னால் வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவம் 2009, மே மாதம் 11 ஆந் திகதியான இன்று முதல் இரத்துச் செய்யப்படுகிறது என்பதையும் செல்லுபடியற்றதாக்கப்படுகிறது என்பதையும் இதன் பின்னர் மேற்கூறிய மொஹமட் யூசுப் ஷிஹாப்டீன் என்பவரால் எனது அட்டோர்ணி தத்துவக்காரராக செயற்படும் எந்த நடவடிக்கைக்கும் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மொஹமட் ஷாகீர் காரியப்பர்.

5-570

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

நுகேகொடை, சுபதர்மாராம வீதி இல. 103 இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் இல. பீவீ 61640 ஐக் கொண்டதுமான ''எமெஸ்கோ என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரினாலான கம்பனி, 2007, ஒற்றோபர் 08 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மிலிந்த சமரசேக்கர,
பணிப்பாளர்.

5-608/1

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

ஜா-எல, வெலிகம்பிட்டி, இல. 884 இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் இல. பீவீ 62627 ஐக் கொண்டதுமான ''குருகே ரெசிடென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.01.07 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். டி. குருகே,
பணிப்பாளர்.

5-608/2

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

நாவலை, நாரஹேன்பிட்டி வீதி, ஜெஸ்மின் பார்க், இல. 30/2, 'டிபீஜே ஹவுஸ்' இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும்

இல. பீவீ 63585 ஐக் கொண்டதுமான ''எடெஸ்லிங் கோட்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.03.26 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டி. பீ. எம். ரீ. ஜயமான்ன,
பணிப்பாளர்.

5-608/3

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

கொழும்பு 10, மருதானை வீதி, இல. 614, 'சென்ரல் பிளாஸா கட்டிடத் தொகுதி' கடை இல. 3/3 இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் பீவீ 63886 ஐக் கொண்டதுமான ''ஹபீப் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.4.23 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எஸ். மொஹமட் அலப்டீன்,
பணிப்பாளர்.

5-608/4

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

திஸ்ஸமஹராம, யோதகண்டியவில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் பீவீ 65128 ஐக் கொண்டதுமான ''ஐ. ரீ. அன்ட் லேங்குவேஜ் எகடமி (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.8.12 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. ஆர். டபிள்யூ. திலக்கரத்ன,
பணிப்பாளர்.

5-608/5

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

நாவலை, நாரஹேன்பிட்டி வீதி, ஜெஸ்மின் பார்க், இல. 30/2 இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் பீவீ 66025 ஐக் கொண்டதுமான ''பேருவல டொக்யார்ட் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.10.30 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டி. பீ. எம். ரீ. ஜயமான்ன,
பணிப்பாளர்.

5-608/6

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

பலாங்கொடை, மஹவலதென்ன, தெலன்திரிய இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் பீவீ 65129 ஐக் கொண்டதுமான ''கொஸ்ட் கொன்சல்ரன்ஸ் கொன்சோர்ரியம் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.08.12 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. ஆர். டபிள்யூ. திலகரட்ன,
பணிப்பாளர்.

5-608/7

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

பன்னிப்பிட்டி, பழைய வீதி, இல. 88/1 இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் இல. பீவீ 66287 ஐக் கொண்டதுமான ''குளோபல் லியன்ஸ் ரிவல்ஸ் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.11.21 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஜீ. சீ. சுசந்தி,
பணிப்பாளர்.

5-608/8

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

தெஹிவளை, அத்திடிய, பிரதான வீதி, இல. 140/7 இல் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் இல. பீவீ 66256 ஐக் கொண்டதுமான ''நியூ ரிம்ஸ் எம்புரோய்டரி (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் பெயரிலான கம்பனி, 2008.11.20 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கே. ஏ. ஏ. பத்மகுமார,
பணிப்பாளர்.

5-608/9

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் : ரிச் ஹில் சிலோன் ரீ (பீவீரீ) லிமிட்டெட்*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009*
*பதிவு இலக்கம் : பீவீ67512*

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 29/2, பங்கினிவத்த மாவத்தை, மிரிஹான, நுகேகொடை

பணிப்பாளர்.

5-652

---

### அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

கனடா, ஒன்டாரியோ எம்2ஆர் 1பி1, நோர்த்யோர்க், பெட்டி ஆன் டிரைவ், இல. 288 இல் வசிக்கும் பீட்டர் வில்ஹெல்மினா மேனகா ஆகிய நான், கொழும்பு 01, த. பெ. இல. 346, எச்சிலன் சதுக்கம், ஈஸ்ட் ரவர், உலக வர்த்தக சந்தை, தளம் 26 இல் வசிக்கும் டன்ஸ்டன் பெர்னாண்டோ என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட, சிங்கப்பூரின் பிரசித்த நொத்தாரிசு சோ கிம் லியன் அய்லின் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2007 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆந் திகதியிடப்பட்டதுமான விசேட அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தினை இரத்துச்செய்துள்ளதாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகிறேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட டன்ஸ்டன் பர்ணான்டோ என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

பீட்டர் வில்ஹெல்மினா மேனகா.

5-604

---

## ஏல விற்பனைகள்

### றுஹுன அபிவிருத்தி வங்கி - தல்கஸ்வல கிளை

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் விசேட எற்பாடுகள் சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.18 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு இங்கு கீழ்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

#### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே நாகொடையில் அமைந்துள்ள 61X என்ற கிதுலகந்த அல்லது கிதுலகந்தையை சூழ உள்ள ஒரு ஏக்கர் ஒரு றூட் இருபது பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 20பே.) மிகப்பெரிய காணியில் அமைந்துள்ள மரங்கள், பழவர்க்கங்கள், உட்பட அனைத்தும் ஆகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**-2008.10.24 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2009.03.02 ஆந் திகதியின் "தினமின", "த ஐலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைப் பார்க்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**-காலி மாபலகமையில் அமைந்துள்ள நாகொடை சந்தியை தாண்டி கிலோ மீற்றர் 01 செல்ல வலப்பக்கமாக விழுந்திருக்கும் பிடஓவிட பாதையில் மீற்றர் 150 செல்லும் போது இக்காணி தென்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-ஏலவிற்பனை முடியும் வேலையில் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்கண்ட படி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25%;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புறன, அநகாரிக தர்மபால மாவத்தையின், இல. 382A என்ற இடத்தில் அமைந்துள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இல. : 041-2231532, 2226208, 2226209, 091-2296491.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை,
தொலைபேசி இல. : 041-2228731, 071-4438516.

5-565/1

---

### றுஹுன அபிவிருத்தி வங்கி - தல்கஸ்வல கிளை

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் விசேட எற்பாடுகள் சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.18 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு இங்கு கீழ்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே நியாகம பிரதேச செயலகப் பிரிவிலே நியாகமையில் அமைந்துள்ள தொடகஹவத்தை துண்டான ஜீ. டி. கருணாரத்ன அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரான இல. 1016/2004 என்ற வரைபடத்தின் பிரகாரம் இரண்டு றூட் இருபத்தேழு தசம் ஒன்று ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 27.15பே.) மிகப்பெரிய காணியில் அமைந்துள்ள பயிர்ச்செய்கைகள், கட்டிடங்களும் ஆகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**-2008.10.24 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தாமனிப் பத்திரிகையிலும் 2009.03.02 ஆந் திகதியின் "தினமின", "த ஐலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைப் பார்க்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**-தல்கஸ்வலயில் இருந்து கஹதுவ நோக்கிச் சென்று இலங்கை மின்சார சபையின் டிப்போவுக்குச் செல்லும் பாதை மீற்றர் 700 மீற்றர் செல்ல இடப்பக்கமாக விழுந்திருந்த பாதையில் 2 ஆவது வீடும் காணியுமாகும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்கண்ட படி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25%;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புறன, அநகாரிக தர்மபால மாவத்தையின், இல. 382A என்ற இடத்தில் அமைந்துள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இல. : 041-2231532, 2226208, 2226209, 091-2296491.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை,
தொலைபேசி இல. : 041-2228731, 071-4438516.

5-565/2

---

**பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். டபிள்யூ. சமரநாயக்க அவர்களால் வரையப்பட்டு, பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான 1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 228 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5106 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (கிருலப்பனை 4 ஆம் இலக்க வரைபடத்தில் 108 ஆம் பாகம் 117 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட மீள் அளவை செய்யப்பட்ட 2297 ஆம் இலக்க காணித்துண்டின் உப பிரிவு) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளேயிலுள்ள பல்லேபத்துவிலிருக்கும் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் கிருலப்பனை, அவிசாவளை வீதியில் 177 ஆம் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கொன்னகஹவத்த என அழைக்கப்படும் காணி***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 2.21பே.)***

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். டபிள்யூ. சமரநாயக்க அவர்களால் வரையப்பட்டு, பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான 1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 228 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5107 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (கிருலப்பனை 4 ஆம் இலக்க வரைபடத்தில் 108 ஆம் பாகம் 117 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட மீள் அளவை செய்யப்பட்ட 2297 ஆம் இலக்க காணித்துண்டின் உப பிரிவு) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளேயிலுள்ள பல்லேபத்துவிலிருக்கும் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் கிருலப்பனை, அவிசாவளை வீதியில் 179 ஆம் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கொன்னகஹவத்த என அழைக்கப்படும் காணி***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 2.69பே.)***

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் சீ. எம். சீ. பெர்னாண்டோ அவர்களால் வரையப்பட்ட 1984 ஆம் ஆண்டின் யூலை மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 332 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2288ஏ, துண்டு 2288 ஆகியவற்றின் ஊடான பாதை உரிமையுடன்***

**ஆதனத்திற்குச் செல்வதற்கான வழி.**- கிருலப்பனை பாலத்தில் இருந்து அவிசாவளை வீதி ஊடாக 450 மீற்றர் தூரம் நாகஸ்வத்த வீதி வரை செல்லவும். அதன் பின்னர், அவிசாவளை வீதிக்கு சமாந்தரமாகச் செல்லும் உப வீதி ஊடாக 50 மீற்றர் தூரம் சென்றதும் இந்தக் காணியை அடையலாம். இரு உடைமைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதுடன் பாதைக்கு முன்பாகவும் உள்ளது.

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆந் திகதியிடப்பட்ட 1323 ஆம் இலக்க அடைமான உறுதி மூலம் நியூ பியசிரி என்டர்பிரைஸ் நிறுவனத்தின் பங்குதாரர்களான ஹேவாபட்டகே நிஷாந்த எனவும் அழைக்கப்படும் நிஷாந்த ஹேவாபட்ட, ஜயந்தி கோதாகொட ஆகியோரால் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி இன் (முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏஷியா வங்கி மற்றும்*

*வரையறுக்கப்பட்ட பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் என அழைக்கப்பட்டது)*

எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**– ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) 90,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில் மொத்த விளம்பரச் செலவில் 50% ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000 ;

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

இத்தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு தயவுசெய்து 2008 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 1 ஆந் திகதி வெளியான "சிலோன் டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" செய்திப் பத்திரிகைகளையும் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும் பார்வையிடவும்.

மேலதிக விபரங்கள், உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "சிரேஷ்ட முகாமையாளர், சட்டப் பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி, இல. 450, காலி வீதி, கொழும்பு 03" எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலக்கங்கள் இல. : 2565573, 2565565.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரசாங்க அங்கீகாரம்கொண்ட ஐஎஸ்ஓ 9001 :
2000 இலக்க தராதரமுடைய ஒரேயொரு பிரபல
முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி செயல் முகவர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/ஃபக்ஸ் : 081-2224371 | தொலைபேசி/ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

5-572

## DFCC வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் ஏல விற்பனை**

***விற்பனை 1***

***23126 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்***

**மேல் மாகாணம், கம்பஹா பதிவுப் பிரிவில், அலுத்குரு கோரளே, றாகம் பத்துவில் கம்பஹா நகரசபை எல்லைக்குட்பட்ட வரிமதிப்பீட்டு இல. 04, பௌத்தாலோக மாவத்தை, மெதகம, கம்பஹா என்ற முகவரியில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. யாப்பா அவர்களால் வரையப்பட்ட, 2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதியிடப் பட்ட 834 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப் பட்டுள்ள ஹிக்கஹவத்த எனக் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 8.08பே. அல்லது 0.0204 ஹெக்டயர்)***

***விற்பனை 2***

***25350 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, றாகம பத்துவில் கம்பஹா நகரசபை எல்லைக்குட்பட்ட கம்பஹா, மெதகம கிராமத்தில் வரிமதிப்பீட்டு இல. 81, பௌத்தாலோக மாவத்தையில் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. எல். ஜீ. அத்துகோரள அவர்களால் வரையப்பட்ட, 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 3141 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு எக்ஸ் 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள கஹட்டகஹவத்த எனக் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 22பே.)***

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டபிள்யூ. ராஜகருணா அவர்களால் 2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 23126 ஆம் இலக்க விணை உறுதி மற்றும் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 25350 ஆம் இலக்க பிணை உறுதி மீதான வருமதியான கொடுப்பனவு தவணை தவறியதால், கம்பஹாவில் கிரான்ட் பிரிக்ஸ் என்டர்பிரைசஸ் என்ற பெயரில் வியாபாரத்தை தனி உரிமைத்துவத்துடன் நடத்திவரும் கம்பஹாவைச் சேர்ந்த உபுல் விக்கிரமசேகர அவர்களால் DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் (முறையே) எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 31,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000 தரச் சான்றிதழ்பெற்ற ஒரேயொரு
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/ ஃபக்ஸ் : 081-2224371 | தொலைபேசி/ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

5-573

---

### தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்கீழான ஏல விற்பனை*

**தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான பெறுமதிமிக்க ஆதனத்தின் ஏலவிற்பனை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரி பற்றுவின் நாரண்வல உப கந்தோர் மற்றும் மகர பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்ட கிரலவலவில் அமைந்துள்ள பட்டடொம்பகஹ வத்த என்றும் மில்லகஹவத்த என்றும் அழைக்கப்படும் காணியும் 2005, யூலை 08 ஆந் திகதிய 737/2005 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு ''ஏ'' என அடையாளமிடப்பட்டதுமான 20 பேர்ச்சஸ் காணித்துண்டின் ஏல விற்பனை

**ஆதனத்தின் விவரணம்.-**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரி பற்றுவின் நாரண்வல உப கந்தோர் மற்றும் மகர பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்ட கிரலவல கிராமத்தில் அமைந்துள்ள பட்டடொம்பகஹவத்த என்னும் மில்லகஹவத்த என்றும் அழைக்கப்படும் காணியும் அதில் நிற்கும் கட்டிடங்கள், மற்றும் அனைத்தும் உள்ளடங்களாகவும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவினால் ஆக்கப்பட்ட 2005.07.08 ஆந் திகதிய 737/ 2005 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு ''ஏ'' என அடையாளமிடப்பட்டதும் வடக்கில்: கீர்த்தி பண்டாரவின் காணியையும்; கிழக்கில் : ஆர். பி. ரூபசிங்கவின் காணியையும் ; தெற்கில் : ஆர். பி. ரூபசிங்கவின் காணியையும் ; மேற்கில் : பாதையையும் எல்லைகளாகக் கொண்டதும், சொல்லப்பட்ட 737/ 2005 ஆம் இலக்க வரைபடத்திற் கமைய இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடையதும், கம்பஹா காணிப்பதிவகத்தில் சி 648/ 264 (குறிப்புப் பகுதி) இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

*(இல. 308/எப், கலஹெட்டியவா தெற்கு, கனேமுல்லையைச் சேர்ந்த திருமதி கக்கொட ஆராச்சிகே தமராகுமாரியினால் தேசிய சேமிப்பு வங்கிக்கு இவ் ஆதனம் ஈடுவைக்கப்பட்டுள்ளது.)*

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** இந்திகஹமுல்ல கடவத்த சந்தியிலிருந்து வலது பக்கம் திரும்பி, வேபொட பாதையில் 3/4 கி. மீ. வரை சென்று, ''மதர் லேண்ட் நர்சரி'' எனும் பெயர்ப்பலகை அருகில் உள்ள குறுக்கு ஒழுங்கைக்கு வலதுபக்கமாகத் திரும்பவும். இவ் ஒழுங்கையில் மேலும் 125 மீட்டர் தூரம் வரை சென்று இடதுபக்கம் உள்ள ஆனத்தை அடையலாம்.

இவ்வாதனம், பகிரங்க ஏலமூலம் 2009, யூன் 26 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யப்படும் விதம்.-** ஏலத்தைப் பெற்ற கொள்வனவுகாரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் கொடுப்பனவு களை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ;
(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரர் தரகராக கொள்வனவு விலையின் 2 1/ 2 % (இரண்டரை வீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 82,601 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000 ;
(7) விற்பனை நிபந்தனைச் செலவாக ரூபா 750 உம்.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்புகொள்ள வேண்டியவர் :

உதவிப் பொது முகாமையாளர் (கடன்).
தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 03,
தொலைபேசி இல. : 011-2576132.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
பட்டய ஏலதாரர்களும் இலங்கையின்
அரச தனியார்துறை வங்கிகளதும்
மதிப்பீட்டாளர்களும் நீதிமன்ற தரகர்களும்.

| தலைமை அலுவலகம் /மற்றும் காட்சியறை : | நகர அலுவலகம்: |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, | இல. 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி. | கொழும்பு 05. |
| தொலைபேசி : 081-2224371, 081-2227593 | தொலைபேசி : 94 (0) 11-2585408 2502680 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 94 (0) 11-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy @sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@ samera1892.com |

5-599

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

### ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 0230001307

கடனாளியின் முழுப்பெயர் : பிரபாத் அசங்க சமன்சிரி ரத்துகமகே அட்டனி அதிகாரமுடைய வித்தாரனகே உதுலா புஷ்பலதா றொட்ரிகோ

''(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2009.02.20 ஆந் திகதிய 1591 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2009.02.24 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், இலக்கம் 220/5, கம்பஹா வீதி, யக்கல என்ற முகவரியில் வசிக்கும் அனுமதிபெற்ற ஏலவிற்பனையாளர் டபிள்யூ. எம். விக்கிரமரத்ன என்பவரினால் 2009.06.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணியில் இருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.''

அடமானப் பத்திரத்தின்கீழ் மூன்று இலட்சத்து அறுபத்தேழாயிரத்து நூற்றெழுபத்துமூன்று ரூபா ஐம்பத்துமூன்று சதம் (ரூ. 3,67,173.53) 2007.07.31 ஆந் திகதிவரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்-

(1) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான இரண்டு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபா எண்பத்து இரண்டு சதத்தினையும் (ரூ. 2,83,052.82) அதற்கான 2007.07.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக எண்பத்துநான்காயிரத்து நூற்றிருபது ரூபா எழுபத்தொரு சதத்தினையும் (ரூ. 84,120.71) மொத்தமாக மூன்று இலட்சத்து அறுபத்தேழாயிரத்து நூற்றெழுபத்துமூன்று ரூபா ஐம்பத்துமூன்று சதத்தினை (ரூ. 3,67,173.53)அறவீடு செய்யவும், மற்றும் ;

(2) குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபா எண்பத்திரண்டு சதத்திற்கான (ரூ. 2,83,052.82) அறவீடு செய்யவேண்டிய 17.90% வீதமான வருடாந்த வட்டியினை 2007.08.01 ஆந் திகதியிலிருந்து குறித்த சொத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரை அறவிடவும் ;

(3) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவீடு செய்யவேண்டிய பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதுமாகும்.

#### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குருகோரளை தாசியபத்துவவில் பண்டாரவத்த கிராமத்தில் வடிசாலைப் பாதையில் வரிமதிப்பீட்டிலக்கம் 89/ 2 என்ற இடத்தில் அமைந்துள்ள கொடகந்துருகஹவத்த என்ற காணிக்கு 1993.08.24 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜே. பீ. ஐ. அபேகோன் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 473 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 2பி என்ற காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 917/66 என்ற இலக்க காணி வரைபடத்தின்படி 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 917/66 என்ற இலக்க காணி வரைபடத்தின் படி 3 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 2ஏ என்ற இலக்க காணித் துண்டும் ; மேற்கே : 2ஏ என்ற இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு எட்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 8.25பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் நீர்கொழும்பு காணிப்பதிவு அலுவலகத்தில் C 864/10 என்ற தலைப் பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன

பணிப்பாளர்கள் சபையின் கட்டளையின்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2009, மே 14.

5-628

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

### ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 0903300007

கடனாளியின் முழுப்பெயர் : வெங்கப்புலி ஆரச்சி மாலனி த சில்வா

''(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2009.02.20 ஆந் திகதிய 1590 ஆம்

இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2009.02.21 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், குருந்துவத்த, வல்கம, மாத்தறை என்ற முகவரியில் வசிக்கும் அனுமதிபெற்ற ஏலவிற்பனையாளர் ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் 2009.06.17 ஆந் திகதி பி. ப. 2.00 மணியில் இருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது."

அடமானப் பத்திரத்தின்கீழ் தொண்ணூற்றையாயிரத்து தொளாயிரத்தைம்பத்தாறு ரூபா மூன்று சதம் (ரூ. 95,956.03) 2005.05.31 ஆந் திகதிவரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

(1) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான அறுபத்தாறாயிரத்து ஐநூற்றைம்பத்துமூன்று ரூபா பதினெட்டு சதத்தினையும் (ரூ. 66,553.18) அதற்கான 2005.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபத்தொன்பதாயிரத்து நாநூற்றிரண்டு ரூபா எண்பத்தைந்து சதத்தினையும் (ரூ. 29,402.85) மொத்தமாக தொண்ணூற்றையாயிரத்து தொளாயிரத்தைம்பத்தாறு ரூபா மூன்று சதத்தினை (ரூ. 95,956.03) அறவீடு செய்யவும், மற்றும் ;

(2) குறிப்பிட்ட அறுபத்தாறாயிரத்து ஐநூற்றைம்பத்துமூன்று ரூபா பதினெட்டு சதத்திற்கான (ரூ. 66,553.18) அறவீடு செய்யவேண்டிய 18.00% வீதமான வருடாந்த வட்டியினை 2005.06.01 ஆந் திகதியிலிருந்து குறித்த சொத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரை அறவிடவும் ;

(3) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவீடு செய்யவேண்டிய பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதுமாகும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், கிழக்கு கிருவாபத்துவவில் குடாபோலான கிராமத்தில் பெரகம பாதையில் வரிமதிப்பீட்டிலக்கம் 50/15 இல் அமைந்துள்ள நகரசபைக் காணி எனப்படும் காணிக்கு 1979.09.24 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜெ. தர்மபால என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2341 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டின் எல்லைகளாக– வடக்கே : 15 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 14 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : எக்மன் முதலாளி என்பவரின் தோட்டமும் ; மேற்கே : 12 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஒன்பது தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 9.75பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் ஹம்பாந்தோட்டை காணிப்பதிவு அலுவலகத்தில் டி 25/ 181 என்ற தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளையின்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2009, மே 14.

5-629

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 0900000168
கடனாளியின் முழுப்பெயர் : பெனட் அல்விஸ் ஜயவீர

(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2002.05.31 ஆந் திகதிய 1239 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2003.09.26 ஆந் திகதிய ''தினமின'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்தப் பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், குருந்துவத்த, வல்கம, மாத்தறை என்ற முகவரியில் வசிக்கும் அனுமதிபெற்ற ஏலவிற்பனையாளர் ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் 2009.06.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணியில் இருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அடமானப் பத்திரத்தின்கீழ் இரண்டு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்றுமுப்பத்திரண்டு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 2,04,832.55) 2001.08.31 ஆந் திகதிவரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

(1) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து பதினெட்டாயிரத்து நூற்றைம்பது ரூபாவினையும் (ரூ. 1,18,150) அதற்கான 2001.08.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக எண்பத்தாறாயிரத்து அறுநூற்றெண் பத்திரண்டு ரூபா ஐம்பத்தைந்து சதத்தினையும் (ரூ. 86,682.55) மொத்தமாக இரண்டு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்று முப்பத்திரண்டு ரூபா ஐம்பத்தைந்து சதத்தினை (ரூ. 2,04,832.55) அறவீடு செய்யவும், மற்றும் ;

(2) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச்செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து பதினெட்டாயிரத்து நூற்றைம்பது ரூபாவுக்கான (ரூ. 1,18,150) அறவீடு செய்யவேண்டிய 18.50% ஆன வருடாந்த வட்டியினை 2001.09.01 ஆந் திகதியிலிருந்து குறித்த சொத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரை அறவிடவும்;

(3) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவீடு செய்யவேண்டிய பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்குமாகும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், கிழக்கு கிருவாபத்துவவில் அம்பலந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் லூனமையில் அமைந்துள்ள நோனகமலந்தையின் 99 ஆம் இலக்க காணித்துண்டுக்கு 1996.06.25 ஆந் திகதி அனுமதிபெற்ற

நிலஅளவையாளர் ஜ. கொட்டம்பகே என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1468 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி ஏ என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 88 ஆம் இலக்க காணித்துண்டும் (பாதைக்கான ஒதுக்கம்) ; கிழக்கே : 1ஏ170 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 63 1/2 என்ற இலக்க காணித்துண்டும் ; மேற்கே : 98 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணியின் பரப்பளவு மூன்று றூட் ஏழு பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 3றூ. 7பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் ஹம்பாந்தோட்டை காணிப்பதிவு அலுவலகத்தில் Ham/48/473/87A என்ற தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளையின்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2009, மே 14.

5-630

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : 0900000499
கடனாளியின் முழுப்பெயர் : கல்பகே கருணாவதி

